ஜூலை 2005

# ரசனை

மாத இதழ்

ரூ.10



## அருணா சாயிராம்

## ஈர்க்கும் இசையின்பம்

மலர் 1

# ரசனை

மாத இதழ்

மணம் 3

# முற்றத்திலிருந்து...

## "நீ இது பொறுத்தி"

இராம பாணம் வாலியின் நெஞ்சைத் துளைத்தது. எல்லாம் முடிந்த பின் அங்கதன் கைகளில் உடைவாள் கொடுத்த இராமன் "நீ இது பொறுத்தி" என்றான். அந்த சொல்லுக்கு அர்த்தங்கள் இரண்டு. "இதை வைத்துக் கொள்" என்னும் அர்த்தம். "நடந்ததைப் பொறுத்துக் கொள்" என்னும் அர்த்தம். காவிய நாயகர்கள் தங்களையும் அறியாமல் தவறுகள் செய்யும் போது அவர்கள் வருத்தம் தெரிவிக்கும் விதம் இப்படித் தான் இருக்கும்.

தமிழறிஞர்கள் குறித்த சமீபத்திய சர்ச்சைக்குப் பிறகு பொதுக் கூட்டமொன்றில் பேசிய ஜெயகாந்தன், "ஜெயகாந்தன் மன்னிப்புக் கேட்டான் என்று எழுதுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். இதற்குப் பிறகு இது குறித்த சர்ச்சையை நாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம். தங்களை ஒரு தமிழ் எழுத்தாளர் காயப்படுத்தி விட்டதாகக் கோபமும் வருத்தமும் கொண்டிருக்கும் அறிஞர் பெருமக்களின் ஆறுதலுக்கு, அந்த மேடைப் பேச்சின் வழி ஜெயகாந்தன் இதைத்தான் சொல்ல விரும்பியிருக்கக்கூடும்:

"நீ இது பொறுத்தி."

ஆசிரியர்
மரபின் மைந்தன் ம. முத்தையா

•

நிர்வாக மேலாளர்
கி. வேணுகோபால்

•

வடிவமைப்பு: ssh media
ஒளிப்படம்: C. அம்பிகா, கங்காதேவி

•

இந்த இதழை இணையத்தில் வாசிக்க
http://www.rasanai.com
http://tamil.sify.com/rasanai

•

தனி இதழ் ரூ 10
ஒரு வருட சந்தா ரூ 120
5 வருட சந்தா ரூ 550

•

தொடர்புக்கு:
ரசனை
35 முதல் தளம், DS வணிக வளாகம்,
347, பெரு வீதி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் 641 009
தொலைபேசி: 0422 2314457 அலைபேசி: 98430-63572


SCM TEXTILE SPINNERS
We Spin your Dreams
SCM TEXTILE SPINNERS
Shop online at www.thechennaisilks.com